


# வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம்



ஒரு நாள் வண்ணத்துப் பூச்சி ஒன்று தோட்டம் ஒன்றில் பறந்து கொண்டிருந்தது. தனக்குப் பிடித்த செடி ஒன்றில் வந்து அமர்ந்தது. அந்தச் செடியின் இலையொன்றில் தனது முட்டைகளை இட்டது. முட்டை இட்ட பின்னர் அது இலையைவிட்டு எழுந்து பறந்து சென்றது. நூற்றுக் கணக்கான முட்டைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு கொத்தாக இருந்தன.

அம்மாவுடன் அந்த வழியால் போன மலர் அந்த முட்டைகளைக் கண்டாள். “அம்மா இது என்ன?” என்று கேட்டாள். “மலர்! இவை வண்ணத்துப் பூச்சியின் முட்டைகள்” என்று அம்மா பதில் கூறினார்.
அதைத் தொடப்போன மலரை அம்மா தடுத்தார். “நாங்கள் ஒவ்வொரு நாளும் வந்து இந்த முட்டைகளுக்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்று அம்மா கூறினார்.



மலர் ஒவ்வொரு நாளும் வந்து பார்த்தாள். ஐந்தாம் நாள் வந்தபோது, முட்டைகள் பொரித்து புழுக்கள் வெளியே வந்ததைக் கண்டாள். அம்மா சொன்னார், “இவற்றைக் குடம்பிகள் என்று சொல்வார்கள். வண்ணத்துப் பூச்சியின் குடம்பிகள் மயிர்க் கொட்டிகள் என அழைக்கப்படும். குடம்பிகள் இலைகளைக் கடித்து உண்ணும்.  இவை எப்போதும் உணவை உண்டபடியே இருப்பதால் கொழுத்து, வளரும்.”



ஒவ்வொரு நாளும் மலர் வந்து பார்க்கையில், அவை இலைகளைக் கடித்து உண்டபடியே இருந்தன. பருமனில் அதிகமாவதனால், அடிக்கடி தமது தோலைக் கழற்றி, புதுத் தோலை உருவாக்குவதுமாய் இருந்தன. மூன்று வாரத்தில், நான்கு தடவைகள் இப்படி நடந்தது. “பொரித்த குடம்பியின் அளவிலிருந்து கிட்டத்தட்ட நூறு மடங்கு அதன் பருமன் அதிகரிக்கும்” என்று அம்மா சொன்னார்.





ஒருநாள் போனபோது அவற்றைக் காணவில்லை. மலருக்கு கவலை வந்தது. அம்மா அங்கே ஒரு கிளையில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கூட்டைக் காட்டினார். அம்மா மலரிடம், “மேலதிக உணவை குடம்பிகள் உடம்பில் சேர்த்து வைக்கும். வளர்ச்சியடைந்த குடம்பி தன்னைச் சுற்றி ஒரு கூட்டைச் சுரக்கும்.

இது கூட்டுப்புழு என அழைக்கப்படும். இந்த நிலையில் உண்பதை நிறுத்தி விடும். கூட்டிற்குள் அசையாமல் இருந்தபடியே புழு ஓய்வெடுக்கும். இவை மரக் கிளைகளில் தொங்கிக் கொண்டோ அல்லது மண்ணிற்குக் கீழே தன்னை மறைத்துக் கொண்டோ இருக்கும்” என்று சொன்னார்.



பார்க்கும்போது அசைவின்றி அமைதியாக இருந்தாலும், கூட்டுக்குள்ளே நிறைய மாற்றங்கள் ஏற்படுவது தெரிந்தது. “குடம்பிகள் சிறிய கண்களையும், கட்டையான தடித்த அதிக எண்ணிக்கையில் கால்களையும், குறுகிய உணர்கொம்புகளையும் கொண்டிருந்தனவல்லவா? ” என்று அம்மா கேட்டார். “ஆம் அம்மா” என்றாள் மலர்.



“குடம்பியிலிருந்த விசேசமான உயிரணுக்கள் விரைவாக விருத்தியடையும். அப்போது பெரிய கண்கள், நீண்ட மூன்று சோடிக் கால்கள், நீண்ட உணர்கொம்புகள் எல்லாம் விருத்தியடையும். அத்துடன் அவை பறப்பதற்கு வண்ணங்கள் நிறைந்த, அழகான இரு சோடிச் சிறகுகளும் விருத்தியடையும். அப்படியானால் அது என்ன?” என்றார் அம்மா. கொஞ்சம் யோசித்த மலர் “அது வண்ணத்துப் பூச்சிதானே அம்மா” என்றாள்.





கிட்டத்தட்ட மூன்று கிழமைகளின் பின்னர், ஒரு நாள் அவர்கள் வந்தபோது, கூட்டை உடைத்துக் கொண்டு வண்ணத்துப் பூச்சி வெளியே வருவதை மலர் கண்டாள். “கூட்டிற்குள் இருந்தபடியே ஒரு புழு அழகிய வண்ணத்துப் பூச்சியாக இவ்வாறு மாற்றமடைவது உருமாற்றம் எனப்படும்” என்று மலரிடம் அம்மா சொன்னார்.

“இது முழுமையான உருமாற்றம்” என்று அம்மா சொன்னார். இந்த வண்ணத்துப் பூச்சி குடம்பியில் இருந்து மிகவும் வேறுபட்ட தோற்றத்தைக் கொண்டிருந்ததைப் பார்த்து மலர் ஆச்சரியப்பட்டாள்.



வெளியே வந்த வண்ணத்துப் பூச்சி, தனது அழகிய வண்ணங்கள் நிறைந்த சிறகுகளை விரித்து சுதந்திரமாகப் பறந்து திரிந்தது.  பூக்களில் இருந்து தேனை உறிஞ்சிக் குடித்தது. “அம்மா இனி இந்த வண்ணத்துப் பூச்சிக்கு என்ன நடக்கும்” என்று மலர் அம்மாவிடம் கேட்டாள். “சில வகை வண்ணத்துப் பூச்சிகள் தேனை உண்ணும்.






வேறு சில வகை எந்த உணவும் உண்ணாது பறந்து திரியும். ஆண் வண்ணத்துப் பூச்சிகளுடன் சேர்ந்து மீண்டும் முட்டைகளை இடும்” என்றார் அம்மா. “அப்படியானால் திருப்பி குடம்பி, கூட்டுப்புழு வரும். அப்படித்தானே” என்று மலர் கேட்டாள். “ஆம், அப்படி மீண்டும் மீண்டும் நடப்பதால்தான், வாழ்க்கை வட்டம் என்கிறோம்” என்றார் அம்மா.